

நல்லூர் கிளை நூலகம்
மாநகர மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5·00

D-ms

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 26 செவ்வாய்க்கிழமை (12 10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 318

ஸ்ரீ. ல. சு. கவிலிருந்து அனுரா இராஜினாமா!

உட்கட்சிப் பூசல் உச்சநிலை

கொழும்பு, ஒக்டோபர் 12

ஸ்ரீலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உட்கட்சிப் பூசல் உச்ச நிலையை அடைந்துள்ளது. கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரான அனுரா பண்டார நாயக்கா கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்திருக்கிறார்.

கட்சியின் தேசிய அமைப்பாளரான இவர், கம்பஹா மாவட்ட எம். பியும் ஆவார்.

கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்வதாகவும் — அரசியலில் இருந்து விலகுவதாகவும் — திரு பண்டார நாயக்கா கொழும்பில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் — "கட்சியை ஒரு சிலர் தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்துள்ளனர். இச் சதிக்காரர்களினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட செயல்களினாலேயே நாம் இராஜினாமாச் செய்யவேண்டிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவில் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 12

நேற்று முன்தினம் முல்லைத்தீவின் மருதோடையிலும் கற்குளத்திற்கும் இடையில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் மறைந்திருந்து தாக்கியதில் துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

இரண்டாம் லெப்டினன்ட் இராசதுரை சிவகுமார் (பட்டிக்குடியிருப்பு, நெடுங்கேணி) என்பவரே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவராவார். (ந)

முகத்துவாரத்தில் மீட்கப்பட்ட

சக்தி வாய்ந்த குண்டு குறித்து தகவல் தந்தால் ரூ. 5 லட்சம்

கொழும்பு, ஒக். 12

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படும்- "டெனிம்" லொறியில் பொருத்தப்பட்டிருந்த—சக்தி வாய்ந்த குண்டு குறித்து தகவல் தருபவர்களுக்கு ஐந்து லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் — இவ்வாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

[illegible] ஒன்றரைக் [illegible] மூன்றரைக் கிலோ எடையுள்ள இக்குண்டு இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாக முன்னர் அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

ராஜீவ் காந்தி, முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா ஆகிய இருவரையும் கொலை செய்ததாகக் கருதப்படும் தற்கொலைப் படையினர் இத்தகைய மேலங்கிகளை அணிந்தே தற்கொலைத் தாக்குதல் நடத்தியதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

மாத்தளையிலும் தமிழரை பொலிஸில் பதிய பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

மாத்தளை மாவட்டத்தில் வசிக்கும் தமிழ் மக்கள் அனைவரும் பொலிஸில் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

மாத்தளை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் ஆரியபால இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

வெளி மாவட்டங்களில் இருந்து பலரும் வந்து அங்கு தங்கியுள்ளதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பொலிஸார் அங்கு வீதிச் சோதனைகளிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் தமிழர்களை தமது பெயர்களைப் பொலிஸ் நிலையங்களில் பதியும்படி ஏற்கனவே உத்தரவிடப்பட்டிருந்தது தெரிந்ததே. (உ-6)

முடிவு நெருங்கியது போன்று கலைஞர் கருணாநிதி உரை

சென்னை, ஒக். 11

சென்னையில் நேற்று முன்தினம் மாலை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.கவினால் கொண்டாடப்பட்ட முப்பெரும் விழாவில், கட்சித் தலைவர் மு. கருணாநிதி பேசும் போது தமது முடிவு நெருங்கி விட்டது போன்று தெரிவித்தார்.

தான் இறந்தால் தனது உடல் புதைக்கப்படும் இடத்துக்கு முன்னர் அறிவாலயத்தைச் சுற்றி எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில் மகிழ்ச்சியோ, உற்சாகமோ காணப்படவில்லை. வழக்கத்தை விட குறைவான மக்களே விழாவில் கலந்து கொண்டனர்.

பிரச்சினைக்குரியவரான திரு.வை. கோபாலசாமி இவ்விழாவில் கலந்து கொள்ளவில்லை.

தமக்கு ஆதரவாகத் தீக்குளித்து இறந்த ஆதரவாளர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக அரக்குறிச்சிக்கு கோபாலசாமி சென்றிருந்தார். இவரின் இன்னொரு ஆதரவாளரும் தீக்குளித்து உயிரிழந்தார். (உ-எ)

கட்சி பொதுக்குழுவை கூட்ட கோபாலசாமி கோரிக்கை

சென்னை, ஒக். 12

தி.மு.கவின் பொதுக்குழுவை உடனடியாக கூட்டும்படி வை. கோபாலசாமி கேட்டுள்ளார்.

கருணாநிதியைக் கொலை செய்ய விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படும் திட்டத்துக்கும் தமக்கும் சம்பந்தம் உண்டு என்று பொதுக்குழு தீர்மானித்தால், தாம் அதற்காக எந்தத் தண்டனையையும் ஏற்கத் தயார் என்று கோபாலசாமி கூறியுள்ளார்.

தம்மைத் தாமே தலைவர்களாக நினைத்துக் கொள்பவர்களிடம் இருந்து கட்சி காப்பாற்றப்பட வேண்டும் என்றும் கோபாலசாமி கூறினார். (உ-எ)

தமது திட்டங்களை ஜனாதிபதி நாடாளுமன்றில் அறிவிப்பார்

அதற்காக அடுத்த மாதம் புதிய கூட்டத் தொடர்

கொழும்பு, ஒக். 12

நாடாளுமன்றத்தின் தற்போதைய கூட்டத்தொடர் ரத்துச் செய்யப்பட்டு, புதிய கூட்டத் தொடர் அடுத்த மாதம் - நவம்பர் - நடுப்பகுதியில் ஜனாதிபதி விஜேதுங்காவினால் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது.

அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" இத்தகவலை வெளியிட்டது.

அடுத்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பதாக புதிய கூட்டத் தொடர் ஆரம்பித்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமது கொள்கைத் திட்டத்தை வெளியிடுவதற்காக ஜனாதிபதி விஜேதுங்கா நாடாளுமன்றத்தின் தற்போதைய கூட்டத்தொடரை ரத்துச் செய்து, புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைக்க தீர்மானித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபோது மறைந்த பிரேமதாஸாவின் கொள்கைகளை தொடர்ந்து அமுல் நடத்தல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

தென் மாகாண சபையின்

முதலமைச்சருக்கு பதவிப் பிரமாணம் செய்வதற்கு ஆளுநர் நிபந்தனை

கொழும்பு, ஒக். 12

தென் மாகாண சபையின் முதலமைச்சராக திரு அமரசிறி தொடங்கொடவுக்குப் பதவிப் பிரமாணம் செய்வதற்கு, ஆளுநர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் நிபந்தனை விதித்துள்ளார்.

அமரசிறி தொடங்கொடவை ஆதரிப்பதாகத் தெரிவித்திருக்கும் மொத்தமுள்ள இருபத்தெட்டு உறுப்பினர்களையும் நேரில் கூட்டிக் கொண்டு வந்தாலே அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைக்க முடியும் என்பதே அந்த நிபந்தனையாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரான அமரசிறி தொடங்கொட நேற்றுக் காலை காலி கோட்டையிலுள்ள ஆளுநர் மாளிகைக்குச் சென்றிருந்தார். அவருக்கு ஆதரவு தெரிவிக்கும் 27 உறுப்பினர்களும் கூடச் சென்றிருந்தனர். ஆதாரமாக நிற்கும் இலைசேகரா மற்றும் செல்ல

(6 ஆம் பக்கம் பார்க்க)

மிருசுவிலில் ஹெலித் தாக்கு

தென்மராட்சி, ஒக் 12

நேற்றுக் காலை 10.30 மணிக்கு கண்டி வீதி மிருசுவிலில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொதுமக்களை நோக்கி ஹெலியிலிருந்து கிரனேட் வீசப்பட்டதாகவும், இத்தாக்குதலில் வீதியில் சென்ற ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

கிளாலிப் படகு சேவை இன்று

யாழ்ப்பாணம், ஒக். 12

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்றும் வழமையான [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

வடக்கில் தொடர்ந்து ராணுவ நடவடிக்கை

ராணுவ அதிகாரி தெரிவிப்பு

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் முதலாம் கட்டம் பூர்த்தியாகிவிட்டாலும், அதனைத் தொடர்ந்து இன்னும் பல இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நேற்றுமுன்தினம் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனையிறவிலிருந்து முன்னேறி கிளாலி கடனேரியைத் தாண்டித்து சாவகச்சேரி வரை முன்னேறுவதே யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் முதலாம் கட்டம் என்று நம்பப்படுவதாகவும்—

படைகள் முன்னேறினாலும் நிலைத்து நிற்க முடியாத நிலைதான் காணப்படுவதாகவும் — அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவம் கூடிய காலம் நிலைத்து நின்றதாக வரலாறு இல்லை என்று பல உயர் இராணுவ அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் — அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-3)

நன்றி

ஆசிரியர் தினத்தன்று எம்மைப் பாராட்டிக் கௌரவித்த பெற்றோர், பழைய மாணவர்கள், பாடசாலை நலன் விரும்பிகள், மாணவர் ஆகியோருக்கு எமது நன்றிகள்.

— அதிபர், ஆசிரியர்கள்
கோண்டாவில் இராமகிருஷ்ண ம. வி.

(27623)

மூன்றாம் ஆண்டு முடிவுறா நினைவுகள்

ஆண்டவன் படைப்பு: 14 — 01 — 1935

அந்நியன் அழிப்பு: 12 — 10 — 1990

அமரர்

சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம்

(மரதன் மகா)

(கணக்காய்வாளர் காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபனம்)

சாயி தந்த தெய்வ வரம் ஒன்று
சாய்ந்து ஆண்டுகள் மூன்று
அனலாக மறைந்தனவே ஐயகோ
தந்தவரம் பாதியிலே பறித்துவிட்ட
பாபாவின் லீலைகள் தான் என்னவென்று
இன்றுவரை புரியவில்லை தெய்வமே!
எங்களால் முடியவில்லை அப்பா!
உங்களின் பிரிவுதனை நெஞ்சமது
எள்ளளவும் தாங்கவில்லை
குடும்ப படகில் பயணம் செய்கையில்
பாய் மரம் சரிந்த படகானோம்
நாமிங்கே படகின் லட்சியம் காத்திடுவோம்.

பாபாவை தினம் வேண்டி உங்கள் ஆத்ம சாந்திக்காய் கண்ணீர் பூக்கொண்டு பிரார்த்திக்கும்.

உங்கள் நினைவில் நீந்தும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆஸ்பத்திரியடி,
இணுவில்.

(6538)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
12 — 04 — 1937

மறைவு:
23 — 09 — 1992

திருமதி பூமலர் ஐயாத்துரை

சித்திரையில் மலர்ந்த சிங்காரப் பூமலராய்
இத்தரையில் எழிலாக இன்பமுடன் வாழ்ந்திருந்து
புத்திரராய் எழுவர்களைப் பூவாய் பதித்துவிட்டு
நித்திரையும் போனதெங்கள் நித்திலமே வருகுதியோ

தங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

காங்கேசன்துறை வீதி,
தாவடி.

(27620)

ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

இன்று செவ்வாய் நடைபெறவிருந்த பண்டத்தரிப்புக் கோட்ட மட்டத்திலான ஆங்கில தினப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

(த)

'றுகுணு' திரும்பியது

யாழ்ப்பாணம், ஒக். 12

பருத்தித்துறையில் அமோனியா உரம் இறக்கிக் கொண்டிருந்த "றுகுணு" கப்பல் பொருள்கள் இறக்கி முடித்து நேற்று கொழும்பு திரும்பியது.

கொழும்பில் இக் கப்பலில் 'யூரியா' உரம் ஏற்றப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து கொழும்பிலும், காங்கேசன்துறையிலும் கடற்படையினரால் இக்கப்பல் சோதனை செய்யப்பட்டது தெரிந்ததே.

(உ-3-173-109)

காத்தான்குடியில் புதிய கெரில்லா இயக்கம்

இரு முஸ்லிம்கள் கைது

காத்தான்குடியில் சமீபத்தில் கைதான இருவர், தாம் முஸ்லிம் விடுதலை மஜ்லிஸின் கெரில்லா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்துள்ளனர்.

இந்த இயக்கம் சம்பந்தமான துண்டுப் பிரசுரங்கள், கடிதங்கள் மற்றும் 'எம் 14' ரக கைக்குண்டுகள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டுள்ளனவாம்.

மட்டக்களப்பு வர்த்தகர் ஒருவரைப் பயமுறுத்தி பணம் பறிக்க முயற்சித்த போதே இந்த இருவரும் பொலிஸ் வலையில் சிக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

பச்சிலைப்பள்ளி பகுதியில் வெடிக்காத நிலையில் ஷெல்!

"யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையின் போது படையினரால் ஏவப்பட்ட பல ஷெல்கள் பச்சிலைப்பள்ளியின் பல இடங்களில் வெடிக்காத நிலையில் காணப்படுவதாகவும் இதனால் அப்பகுதியில் நடமாடுவதற்குப் பொது மக்கள் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெடிக்காத நிலையில் காணப்பட்ட ஷெல் மீது பனம்பழம் ஒன்று விழுந்ததால் அந்த ஷெல் வெடித்ததாகவும்—

இதனால் காயமடைந்த சிறுவன் பளை ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் சிகிச்சை பெற்றதாகவும் — தெரிவிக்கப்பட்டது

இதேவேளையில் அல்லிப் பளையிலிருந்து கிளாலி வரையிலான காட்டுப் பகுதிகளில் குண்டு வீச்சு மற்றும் ஷெல் வீச்சு நடாத்தப்பட்டிருப்பதால் இக்காடுகளில் விறகு வெட்டச் செல்ல வேண்டாமெனக் கேட்கப்பட்டுள்ளது.

(உ-117)

அடுத்த வாரம் வாதுவவில் ஆஸ்பத்திரி கருவிகள் வரும்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரிட்டிஷ் அரசு வழங்கிய வைத்திய உபகரணங்களை ஏற்றுவதால் 'வாதுவ' கப்பல் பருத்தித்துறைக்கு வருவது தாமதமாவதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலைக்கான உபகரணங்கள் கொள்கலனுடன் கப்பலில் ஏற்றப்படுவதால் வேலைகள் தாமதப்படுவதாகவும் —

பெரும்பாலும் அடுத்த திங்கட்கிழமை கொழும்பில் இருந்து இக்கப்பல் புறப்பட்டு புதன்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — கொழும்பு துறைமுகத்தில் தரித்துள்ள "ருமண" கப்பலில் பொருள்கள் ஏற்றப்படுவதாகவும் —

இக்கப்பல் அடுத்த மாத முற்பகுதியில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் 9 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிமுதல் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விபரம் வருமாறு:—

★ கொழும்புத்துறை சனசமூக நிலையம் எதிர் குருநகர் சனசமூக நிலையம்.

★ கொய்யாத் தோட்டம் கலைச்சுடர் சனசமூக நிலையம் எதிர் அரியாலை சாந்தி சனசமூக நிலையம்.

(த)

○ ○ ○

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் கல்வித் திணைக்களம் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

இறுதி ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். புனித சார்ள்ஸ் மகா வித்தியாலய அணி மோதும்.

(த)

குழாய்க் கிணறு

அராலி மேற்கு சன சமூக நிலையத்தின் வேண்டுதலின் பேரில் வலி. மேற்கு பிரதேச சபை அராலி மேற்கு மாவீரர் [illegible] அமைத்து வழங்கியுள்ளனர்.

(உ-12)

புதிய LONDON ACCOUNTANCY
CLASSES May - June 1994
C. I. M. A. Stage - I
A. A. T. Inter
ஆரம்பம்: 18 - 10 - 1993
விவரங்களுக்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peter's Lane,
Hospital Road, Jaffna.
(சி-6190)

அந்தியேஷ்டியும் வீட்டுக்கிருத்தியமும்

ஸ்ரீமதி இராஜேஸ்வரி சிவப்பிரகாசம்

தோற்றம்: 05 — 01 — 1935
மறைவு: 13 — 09 — 1993

13-09-1993 சிவபதம் சேர்ந்த எங்கள் இல்லத்தரசி இராஜேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்களின் வீட்டுக்கிருத்தியமும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை (13-10-1993) புதன்கிழமை "யமுனா" ஆனைக்கோட்டை இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். உறவினர்களையும், நண்பர்களையும் இவ்வைபவத்திலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக அழைக்கின்றோம்.

கணவர்
R. சிவப்பிரகாசமும் (Retd. P. H. I.),
பிள்ளைகளும்.

V. S. விக்னலிங்கம்,
"யமுனா",
கிறோத் வீதி,
நவாலி றோட்,
ஆனைக்கோட்டை.

(27618)

யாழ்தேவி நடவடிக்கையின் போது

15 நாட்களில் சாவகச்சேரியை அடைய ராணுவம் திட்டமிட்டதாம்!

கொழும்பு, ஒக். 12

கடந்த 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமான 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் போது 15 தினங்களில் சாவகச்சேரியை அடைவதற்கு படையினர் திட்டமிட்டிருந்தனர் என்று கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கை ஆரம்பமாவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் — அதாவது 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முப்படைத் தளபதிகளும் விமானம் மூலம் பலாலிக்குச் சென்றிருந்தனர்.

வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ரோஹான் தலுவத்த, யாழ் தளபதி பிரிகேடியர் ஜே. தமுனி, பிராந்திய கடற்படைத் தளபதி கொமடோர் ரெறன்ஸ் சுந்தரம் உட்பட முப்படை உயர் அதிகாரிகளுடன் இவர்கள் இரு தினங்கள் ஆலோசனை நடத்தினர்.

அதன் பின்னரே, 'யாழ்தேவி' நடவடிக்கையை ஆரம்பிக்கும் பச்சை விளக்கு கொழும்பில் இருந்து காட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு ஒருவாரத்திற்கு முன்னர் சீனாவில் இருந்து வந்து சேர்ந்த ஆயுதங்களும், 'யாழ்தேவி' நடவடிக்கையின் போது படையினரால் உபயோகிக்கப்பட்டிருந்தன.

இந்த ஆயுதங்கள் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து நேரடியாக இராணுவ டிரக்குகளில் இராணுவ தலைமையகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு கப்பல் மூலமும், விமானம் மூலமும் பலாலிக்கு அவசரம் அவசரமாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது பொது மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இழப்புகள் குறித்து கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் சர்வதேச நிறுவனங்களுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் முறையிட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ)

விக்ரோறியா - மணிக்கூண்டு வீதிச் சந்தி விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். விக்ரோறியா வீதி, மணிக்கூண்டு வீதிச் சந்தி விஸ்தரிக்கப்படுகிறது.

விக்ரோறியா வீதியிலிருந்து மணிக்கூண்டு வீதிக்கு திரும்பும் போதனா வைத்திய சாலையின் வளைவு மதில் இதற்காக உடைக்கப்பட்டு உள்ளே கட்டப்படுகிறது.

இச் சந்திப் பகுதியில் வளைவு குறுகியதாக இருந்ததால் இதுவரை காலமும் பல விபத்துக்கள் இப்பகுதியில் இடம்பெற்று வந்தன.

இதனைக் கருத்திற் கொண்டே இச்சந்தியை விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக யாழ் மாநகரசபையின் மராமத்துப் பொறியியலாளர் தெரிவித்தார்.

(இ-162)

பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், ஒக் 12

சோதனை வாட்டு திட்டத்தின்படி இடம் பெயர்ந்த மாணவர்களுக்காக நடத்தப்பட்ட யாழ். பல்கலைக்கழக 1990 கலைத்துறை முதலாவது பரீட்சையில் 13 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர்.

(க)

விவசாயிகள் பட்டியல்

கரும்பராய், ஒக் 12

உலர் வலய நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது. கோப்பாய் வட்டத்தைச் சேர்ந்த கிராமிய உதவிக் குழுக்கள் இதனைத் தயாரித்து வருகின்றன.

(த-154)

மக்கள் வங்கி விவசாயக் கடன்

மக்கள் வங்கியால் 1993/94 காலபோகத்துக்கான விவசாயக் கடன் வழங்குவது சம்பந்தமான முதலாவது கூட்டம் அண்மையில் கோப்பாய் பிரதேச செயலாளர் பணிமனையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் 83 விவசாயிகளுக்கு சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளைமூலம் கடன் வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

(க-30)

வடபிராந்திய

யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்

அளிக்கும்

நிதியுதவி கலை நிகழ்ச்சிகள்

இடம்: சென். பற்றிக்ஸ் கல்லூரி
காலம்: 16 — 10 — 1993
நேரம்: இரவு 6மணி

நிகழ்ச்சிகள்

1. பருத்தித்துறை சாண்டோ எம். துரைரத்தினம் அவர்களினால் நடத்தப்படும் ""வீரதீரச் செயல்கள்"" முதல் முறையாக யாழ். நகரில் அரங்கேறவுள்ளன.
   - (அ) நெருப்பு புதைகுழியில் சில மணி நேரம் படுத்திருத்தல்
   - (ஆ) இரண்டு உழவு யந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்
   - (இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்
   - (ஈ) ஓடும் வாகனத்தை தொண்டையினால் இழுத்துப் பிடித்து நிறுத்துதல்
   - (உ) 35 கிலோ எடையுள்ள இரும்புக் குண்டினை 7 அடி உயரத்திலிருந்து வயிற்றில் ஏந்துதல்
   - (ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின் மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்
   - (எ) இன்னும் பல வீரதீரச் செயல்கள்
2. திரு. மோகன் மாஸ்ரர் அவர்களினால் நடத்தப்படும் கராட்டி விளையாட்டுக்கள்.
3. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்.
4. கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் நாடகம்.

ரிக்கெட் கிடைக்குமிடங்கள்:

1. ""வெஸ்கோ"", ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2. ""குறிஞ்சி"", திருநெல்வேலி சந்தை.
3. ""நாதன் மருந்தகம்"", கள்ளியங்காடு.
4. ""தாவடி மெடிக்கல்ஸ்"", கோண்டாவில்.
5. ""மெடி இன்குயரர்"", மானிப்பாய்.
6. ""மெடி பிளஸ்"", சங்கானை.
7. ""ஸ்ரீமுருகன்"", நெல்லியடி.
8. ஸ்ரீமுருகன்"" பருத்தித்துறை.
9. ""அம்பாள் பார்மஸி"", சாவகச்சேரி.

குறிப்பு:

யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

— வ. யா. ஆ. ம. வ. சங்கம்.

(சி-6164)

சாவகச்சேரி

அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

முக்கிய அறிவித்தல்

அன்புடையீர்!

*ஒத்திவைக்கப்பட்ட மஹாநவ சண்டிஹோம யாகம்
எதிர்வரும் 25 - 10 - 1993 திங்கள் முதல்
27 - 10 - 1993 புதன்கிழமை வரை*

வெகுசிறப்பாக நடைபெற அம்பாள் திருவருள் கூட்டி உள்ளாள். வியாழ மாற்றத்தை முன்னிட்டு கீழ்வரும் ராசிக்காரரும், ஆயிரத்தெட்டு பாற்செம்பு எடுப்போரும், ஏனைய அம்பிகை அடியார்களும் இந்த சந்தர்ப்பத்தை தவறவிடாது முன்கூட்டியே தங்கள் பெயர், நட்சத்திரத்தை பதிவு செய்து பூஜையில் வைக்கப்படும் நூலும், கூடுதலும் பெற்றுக்கொள்ளவும். நாடுமக்கள் நலம்பெற அனைவரும் பிரார்த்திக்கவும்.

தோஷமான ராசிகள்:

இடபம், மிதுனம், துலாம், விருச்சிகம், மகரம், மீனம், கடகம்.

தவறாது பங்குபற்றவும்

குறிப்பு:

கேதாரகௌரிவிரதம் அனுஷ்டிப்போரும் பெயர்களைப் பதிவுசெய்து, கௌரிவிரத புத்தகத்தையும் பெற்றுக்கொள்ளவும்.

அனைவரும் வருக! அன்னையருள் பெறுக!!
சுபம்.

பிரம்மஸ்ரீ ப. லோககணபதி சர்மா
(தர்மகர்த்தா)

(27620)

31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் மலர்வாய்:	விண்ணில் சருகாய்:
28 — 09 — 1973	13 — 09 — 1993

செல்வி உஷா சிவலிங்கம்

(மாம்பிராய் காங்கேசன்துறை)
(நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவி, மானிப்பாய் மகளிர் கல்லூரி க. பொ. த. உயர்தர மாணவி)

அன்பின் உறைவிடமாய், அழகின் சிகரமாய் எங்கள் குலவிளக்கே! திடீரென எம்மை தனியாக தவிக்கவிட்டு பிரிந்து சென்று விட்டீரே! எப்படியம்மா மறப்போம் உன் நிலவு முகத்தை.

அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டு பல்வேறு உதவிகளைச் செய்து தந்த அன்பு நெஞ்சங்களுக்கும், உற்றார், உறவினர்கள், ஆசிரிய, ஆசிரியைகள் மாணவ, மாணவிகள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (13 - 10 - 1993) புதன்கிழமை ஆனைக்கோட்டை சம்பந்தப்பிள்ளையார் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற இருக்கின்றன. அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நடைபெற இருக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

பெற்றோர், சகோதரர்.

மு. சிவலிங்கம் (நித்தியானந்தம்)
(தந்தை)
ஆனைக்கோட்டை.

(27619)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஒருவாரம் நிரம்பிய பன்டம், காப்பிலி பன்டம், சிவப்பினிசர், பாமாக், பாயடிக்க், பாமாக் கறுப்பு ஆகிய குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. பிளான்டி பரவைக் இல: 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (27616)

உடன் விற்பனைக்கு

அடை வைப்பதற்கு உகந்த கிரிசி, காப்பிலி, பன்ரம், பாமஸ், யாவா பன்ரம் முட்டைகள் உடன் விற்பனைக்குண்டு. 70/6 கச்சமேட்டை, வீதி, யாழ்ப்பாணம்.

(6582)

காவேரி சீயாக்காய்ப்பவுடர்

காவேரி சீயாக்காய்ப்பவுடர் கூந்தலை அடர்த்தியாகவும் செய்வதுடன் சுத்தமாகவும் கருமையாகவும் வைத்திருக்கும். மானிப்பாயில் கிடைக்குமிடம். ஐங்கரன் ஸ்ரோர்ஸ், மத்திய சந்தை, மானிப்பாய். (27601)

இடமாற்றம்

CHAVA MEDILAB மருத்துவ ஆய்வுகூடம், சாவகச்சேரி 81, கச்சாய் வீதி, சாவகச்சேரியில் இயங்கிவந்த மருத்துவ ஆய்வுகூடம், 212 கண்டி வீதி சாவகச்சேரியில் 11-10-93 முதல் இயங்குகிறது என்பதை அறியத்தருகின்றேன்.
M. Coomarasamy M. L. T.
(27609)

6 ஆஸ்பத்திரிகளின் நிர்வாகம் நேரடியாக அமைச்சிடம்

கொழும்பு, ஒக். 12

மட்டக்களப்பு மாகாண ஆஸ்பத்திரி, வவுனியா ஆதார வைத்தியசாலை திருகோணமலை, அம்பாறை, கல்முனை மற்றும் கந்தளாய் ஆஸ்பத்திரிகளின் நிர்வாகம் தொழில்நுட்பக் காரணங்களுக்காக சுகாதார அமைச்சின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த ஆஸ்பத்திரிகளின் நிர்வாகங்கள் இதுவரை மாகாண சபையினால் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் அரசியல்வாதிகளின் கோரிக்கையைத் தொடர்ந்து, இம் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஆஸ்பத்திரிகளின் செயல்பாடுகள் குறித்து சுகாதார அமைச்சுக்கு மாதாந்த அறிக்கை சமர்ப்பிக்கும் படி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கோரப்பட்டுள்ளார். (இ-ஏ)

நூல் வெளியீடு

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் ஏழாலைக் கோட்டத்தினர் அண்மையில் "ஆணி வேர்" என்ற நூலை வெளியிட்டு வைத்தனர்.

(ச-152)

தையல் பயிற்சி நிலையம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நீர்வேலிக் கிளையினர் நீர்வேலி காமாட்சி அம்மான் கோயில் முன்றிலில் உள்ள கட்டடத்தில் பெண்களுக்கான தையல் பயிற்சி நிலையம் ஒன்றை அண்மையில் ஆரம்பித்துள்ளனர்.

(ச-110)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கேள்வி அறிவித்தல்

1. பின்வருவனவற்றிற்குக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
   (a) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் உபயோகத்திற்காக வாடகைக்கு, டீசலில் இயங்கும், ஒரு மோட்டார் கார்.
   (b) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கொள்வனவு செய்வதற்கு டீசலில் இயங்கும்பாவித்த ஒரு மோட்டார் கார்.
2. கேள்விதாரர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து பெறப்பட்ட (ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துக்கும்) மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 200/- செலுத்தியதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளரிடமிருந்து கேள்விப் பத்திரங்களை 19 - 10 - 1993 வரை பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்விப் பத்திரங்களை கட்டணமேதுவுமின்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திட்டமிடல் கிளையில் வேலை நேரங்களில் பார்வையிடலாம்.
4. பூரணப் படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளரிடம் 22 - 10 - 1993 காலை 10-00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.
5. எந்தக் கேள்விப் பத்திரத்தையும் நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கேள்விச் சபைக்கு உண்டு.

- பதிவாளர்.

த. பெ. இலக்கம் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(இ-6217)

6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:	உதிர்வு:
05	12
—	—
12	10
—	—
1970	1987

செல்வன்

இராஜநாயகம் இராஜராஜன்

(ராஜ்)
[கொக்குவில் இந்துக் கல்லூரி உயர் வகுப்பு மாணவன்]

ஆண்டு ஆறு ஆனாலும் அகலாது உம் நினைவு அறிக மகனே!
அலைகடல் போல் ஓடுகிறது கண்ணீர் மகனே ராஜ்
பால் வடியும் பொன் முகம் எங்கே மகனே ராஜ்
படித்து பட்டம் பெறுவீர் என நாம் கண்ட கனவுகள் எங்கே மகனே!

அன்பின் திருவுருவே
பண்பின் பிறப்பிடமே
பாசத்தின் அடித்தளமே
உன் பொன்னெழிலை எண்ணி
அழுத கண்ணோயவில்லை
உண்ணாமலுறங்காமல் உன் தாய்
எல்லையில்லாக் கவலையால் நடைப்பிணமாக
தன்னை மறந்த தந்தைக்கு ஆறுதல் சொல்ல
என்று நீர் நீண்ட ஆயுளுடன் வருவீர்!

உமது ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கும்,

அப்பா, அம்மா, அண்ணா,
நண்பர்கள்.

ராஜராஜன் இல்லம்,
கோண்டாவில் கிழக்கு.
(27589)

நெஞ்சை விட்டு நீங்கா
31ஆம் நாள் நினைவலைகள்

12 — 10 — 1993

மலர்வு	உதிர்வு
27	12
—	—
11	09
—	—
1916	1993

அமரர்

சுந்தரம்பிள்ளை சிவராசா

(முன்னாள் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை கூட்டுறவு பரிசோதகரும், பிரதம லிகிதரும்)

எங்கள் அனைவரையும் நிலையாப் பிரகாரமாய் விட்டுப்பிரிந்த எம் அன்பு அப்பாவே! நினைவலைகள் நெஞ்சங்களில் மோதிக் கொள்ள வஞ்சமிலா முகமும், கள்ளமிலா உள்ளமும் உள்ள சமூக சேவைத் தொண்டனே என்றென்றும் எம் நெஞ்சைவிட்டகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை கண்ணீர் பூக்களால் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்,

குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

"சிவபதி",
14/1, கிதாலை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(27617)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

(12 — 10 — 1993)

மலர்வு	உதிர்வு
11	04
—	—
11	10
—	—
1940	1991

திருமதி

மணிமேகலை இராசலிங்கம்

எங்கள் இல்லத்தின் இணையில்லாத் தலைவியாய் விளங்கி, மனையும், சுற்றமும் பேணிக்காத்து பாசமுடன் எம்மையெல்லாம் அரவணைத்து புவிமீது வாழும் வழி அமைத்து அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் வாழ்ந்து தோன்றாத் துணையாக எம் நினைவுகளில் என்றென்றும் வாழும் எங்கள் பாசத் தெய்வத்தின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தாளையடி, ஒழுங்கை,
திருநெல்வேலி.
(6581)

உதயன்

வெட்ட வெட்ட தழைக்குக!

வெட்டுப் புள்ளிகள் தமிழ் மாணவர்களின் மனங்களை வெட்டும் புள்ளிகள். தமிழ் இனத்தை வெட்டும் புள்ளிகள். இந்த வெட்டுப் புள்ளிகளைக் கண்டு மாணவர்கள் சளைத்து விடக்கூடாது. தமிழினத்தை மூடர்கள் என்று கூறும் நிலைக்கு ஆளாகக் கூடாது.

இவ்வாறு பொருத்தமாகக் கூறியிருப்பவர் யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம்.

உண்மையிலேயே, பல்கலைக்கழக அனுமதிக்கென கடந்த வாரம் அறிவிக்கப்பட்ட வெட்டுப் புள்ளிகள் தமிழர்களின் உயர்கல்வி வாய்ப்பை வெட்டித் தறிக்கும் புள்ளிகளே.

தமிழ் இனத்தின் கல்வி வளர்ச்சியை, அறிவு மேம்பாட்டை வெட்டி வீழ்த்தும் சூழ்ச்சிப் புள்ளிகளும் ஆகும்.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மாணவர்களின் உயர்கல்வி முன்னேற்றத்தை வெட்டி விடுவதற்கென்று தரப்படுத்தல் அறிமுகமானதை இலகுவில் மறந்துவிட முடியாது.

யுத்த நிலைமை காரணமாக, வடக்கு - கிழக்கில் பரீட்சைகளை உரிய காலத்தில் நடத்த முடியாத நிலை உருவாகியது. 1990, 91 ஆம் ஆண்டுகளுக்குரிய ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சைகள் அடுத்தடுத்த வருடங்களில் விசேட பரீட்சைகளாக நடத்தப் பெற்றன.

இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, தெற்கில் நடந்த பரீட்சையையும் வடக்கு-கிழக்கில் நடைபெற்ற விசேட பரீட்சையையும் ஒன்றாகக் கருதி பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இரண்டு பரீட்சைகளையும் தனித்தனியாகக் கருதியே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இது அரசின் முகத்தில் அறைந்தது போலாயிற்று.

இதனை மனதில் வைத்து, வஞ்சம் தீர்க்கும் விதத்தில் 1992 ஏப்ரலில் நடத்தப்பட்ட விசேட பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் மிகக் கடினமானவையாகத் தயாரிக்கப்பட்டிருந்தன.

அதன் தொடராக தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பை வெட்டிவிட வேண்டும் என்ற நோக்குடனேயே வெட்டுப்புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழர்களையே வெட்டி வீழ்த்தி, அவர்களின் பிரச்சினையை இல்லாமற் செய்து விடுவதற்கென 'புத்திசாலி'த்தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் ஸ்ரீலங்கா அரசு, தமிழர்களின் கல்வி வளர்ச்சியை வெட்டிவீழ்த்த வேண்டும் என்பதிலும் தீவிர அக்கறைகாட்டி வருவது ஏற்கனவே தெரிந்த ஒன்று.

எனவே தமிழ் மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளைக் கண்டு மனம் சோரக்கூடாது. பொருளாதார, போக்குவரத்து மற்றும் அபிவிருத்தி போன்ற துறைகளில் மக்கள் அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக முகம்கொடுத்து வாழ்க்கையை இயக்குகிறார்கள். அதேபோல், மாணவர்களும் தமது கல்வி, உயர்கல்வி வளர்ச்சிக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் சூழ்ச்சிகளையும், வெட்டிவீழ்த்தும் நடவடிக்கைகளையும் எதிர்கொண்டு வென்று கல்வியில் முன்னேற வேண்டும். அரசின் நோக்கம் ஈடேற இடம்கொடுக்கக் கூடாது.

தமிழர்களின் கல்வி சிதைந்தால் எல்லாமே சிதைந்து போகும் என்பதை வருங்காலப் பிரஜைகளான மாணவர்கள் மறந்துவிடலாகாது. வெட்டுப் புள்ளிகள் வெட்டினாலும், வெட்ட வெட்டத் தமிழர் கல்வி தழைத்தாலே அவர்தம் வருங்காலமும் தழைக்கும்.

உலர் உணவு

தென்மராட்சியில் யாழ் தேவி நடவடிக்கையால் இடம்பெயர்ந்து மிருசுவில் சென். நீக்கிலோஸ் ஆலயம், பாடசாலை ஆகியவற்றில் தஞ்சமடைந்த 1,800 குடும்பங்களுக்கு யாழ் மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் உடனடியாக ஒரு வாரத்துக்குரிய உலர் உணவுப் பொருள்களை வழங்கி உதவியது. (இ-51)

வீடு, வளவுகளில் வெட்டப்படும்

மரக்கிளை, செடிகளை வீதிகளில் போடாதீர்!

யாழ்.மாநகர சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 12

வீடு வளவுகளில் வெட்டப்படும் மரக்கிளைகள், செடிகள் என்பவற்றை வீதியோரத்திலும், பொது இடங்களிலும் போட வேண்டாம் என நகர மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு யாழ் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் வெளியிடப்பட்டுள்ள பத்திரிகை குறிப்பு ஒன்றில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மாரிகாலம் ஆரம்பித்ததும் நகர்ப்புற மக்களில் சிலர் தமது வீடு, வளவுகளில் உள்ள மரம், செடிகளை வெட்டி வீதிகளிலும், பொது இடங்களிலும், போடுவது அவதானிக்கப்பட்டுள்ளது இதனால் வீதி பாவனையாளருக்கு சிரமமும்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

கொம்மாதுறையில் தமிழரை இம்சை செய்யும் படையினர்

மட்டக்களப்பு மாவட்டம் கொம்மாந்துறையில் ஸ்ரீலங்கா படையினர் தமிழ்மக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதி அடிக்கடி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு இளைஞர், யுவதிகள் மட்டுமன்றி சகல தரப்பினரும் கைது செய்யப்பட்டு முகமூடிகள் முன் நிறுத்தப்படுகின்றனர்.

அடையாளம் காட்டப்படுபவர்கள் தடுத்துவைக்கப்படுகின்றனர். கைதானவர்களில் பலர் இதுவரை விடுவிக்கப்படவில்லை. கைதாகும் இளம் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

படையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்ட ஒருவர் இது பற்றித் தெரிவிக்கையில் —

தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த அறைக்குப் பக்கத்தில் உள்ள அறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளம் பெண் ஒருவர் கொடூரமான பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் —

மற்றும் ஓர் இளம் பெண் தடுத்து வைக்கப்பட்டிருந்த தனது கணவர் பற்றிய விபரம் அறிய கொம்மாதுறை இராணுவ முகாமுக்கு வந்த போது அந்தப் பெண்ணையும் படையினர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர் என்றும் —

சித்தப்பிரமை பிடித்த நிலையில் அந்தப் பெண் விடுவிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். (உ-த)

நிர்வாக சேவை பரீட்சை

கொழும்பு, ஒக். 12

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவிருக்கிறது. (ச)

யூனிசெவ் உதவியுடன் மலசல கூடங்கள்

யாழ். மாநகர சபைக்கு புதிதாக 55 மலசல கூடங்கள் அமைப்பதற்குத் தேவையான நிதி உதவி யூனிசெவ் ஸ்தாபனத்திடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. (ச-162 30)

பாலர் பாடசாலை

வட்டுக்கோட்டை துணைவி கலைவாணி சனசமூக நிலையத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் பாலர் பாடசாலை ஒன்றை அண்மையில் திறந்து வைத்துள்ளனர். (ச-161)

நாடாளுமன்ற உறுப்பினர் விடுதியின்

பல்கனியிலிருந்து விழுந்து காலை முறித்த யாழ் எம்.பி

கொழும்பு, ஒக். 12

யாழ். மாவட்ட எம். பி யான கே. ஸ்ரீநிவாசன் கடந்த 30 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு நாடாளுமன்ற உறுப்பினர் விடுதியான சிராவஸ்தியின் பல்கனியில் இருந்து விழுந்து காலை முறித்துக் கொண்டார்.

இருபது அடி உயரத்தில் இருந்து விழுந்தும் அவர் சத்தம் எழுப்பவில்லை. ஆனால் அயலவர் ஒருவர் அவர் பல்கனியில் இருந்து விழுந்ததை அவதானித்து அவரது உறவினருக்குத் தகவல் அனுப்பினார்.

அடுத்த நாள் — வெள்ளி காலை — திரு ஸ்ரீநிவாசன் தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

லண்டனில் உள்ள அவரது மனைவி சந்திரா, மற்றும் நான்கு பிள்ளைகளும் விரைவில் கொழும்பு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு ஸ்ரீநிவாசனுக்குக் கடந்த சில தினங்களாக கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டு வந்ததாக அவரது உறவினர் ஒருவர் ''சண்டே டைம்ஸ்''க்குத் தெரிவித்தார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளாத அந்த உறவினர், ''இரவில் உள்ள தமது அறைக்கு வரும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்க வேண்டாம் என்று ஸ்ரீநிவாசன் என்னைக் கேட்டுக் கொண்டார்'' என்றும் தெரிவித்தார்.

தமது சமாதான திட்டத்தை எதிர்க்கும் விடுதலைப் புலிகளிடம் இருந்து தமக்கு கொலைப் பயமுறுத்தல் இருப்பதாகவும் ஸ்ரீநிவாசன் முறையிட்டதாகவும் அந்த உறவினர் கூறினார்.

''கடந்த சில தினங்களாக ஒவ்வொரு இரவும் மனக்குழப்பத்தில் அவர் தமது அறையில் நடந்து திரிவார். இது அவரின் நித்திரையைப் பாதித்தது. அவர் நித்திரையில் தன்னை அறியாமலேயே நடந்து பல்கனிக்குச் சென்று விழுந்திருக்கலாம்'' — இப்படி அந்த உறவினர் கூறினார். (உ-எ)

தமிழ் மொழிக் கல்வியில் ஆசிரியர்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும்

இந்து மகளிர் பொன்விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஒக் 12

இன்று எழுபத்திஐந்து வீத மாணவர்கள் தமிழைப் பிழையின்றி எழுதவும் சுருக்கமாக எழுதவும் முடியாதவர்களாகவும் பொதுஅறிவு குன்றியவர்களாகவும் உள்ளனர். தமிழ் மொழிக் கல்வியில் ஆசிரியர்கள் கூடிய அக்கறை செலுத்த வேண்டும்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பொன்விழாக் கொண்டாட்டங்களை நிறைவு செய்து பேசிய யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திருமதி இ. நாகராசா தலைமையில் சமீபத்தில் நடைபெற்ற மேற்படி விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில்;

மருத்துவம், எந்திரவியல் உட்பட சில பீடங்களுக்குப் பலர் தெரிவாகக் கூடிய வாய்ப்பு இருந்தும் மாணவர்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுபற்றி சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டால் அவர்கள் தகுதி இல்லை என்று கூறுகிறார்கள். எனவே மொழி அறிவும் தெளிவாக எழுதும் பயிற்சியும் மாணவருக்கு மிகவும் தேவை.

தமிழ் மொழியை வளர்க்கக்கூடிய எமது மரபுக் கல்வி மங்குகிறது. பண்டிதர்களின் தொகை குறைகிறது. இந்த நிலையில் சில கோட்டங்களில் பண்டிதர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும் போதும் பல மாணவர்கள் அதில் கலந்து கொள்வதில்லை என்று அவர் கூறினார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பேசும்போது —

ஹெலி, பொம்மர்களுக்கு மத்தியிலும் பங்கருக்குள் வாழ்ந்தாலும் புத்தகத்துடன் வாழ்வோம் என்ற திடத்துடன் பயப்படாத இரண்டரை லட்சம் மாணவர்கள் யாழ். நகரில் தமது கல்வியைத் தொடருகின்றார்கள்.

தமிழ், சமயம், இன, மண் பற்றும் கொண்ட பூரண மனிதனை உருவாக்கும் பொறுப்பு எமது கல்வி நிறுவனங்களுக்கு உண்டு. ஆசிரியர்கள் பொறுப்புடன் பிள்ளைகளின் செயற்பாடுகளை நோக்க வேண்டும்.

பெண்கள் கல்லூரிகளில் தனக்கென தனியான ஓர் இடத்தை வகித்துள்ள யாழ் இந்து மகளிர் கல்லூரி கல்விச் செயற்பாடுகளிலும் புறக்கிரிகைகளிலும் முன்னணியில் உள்ளது என்று கூறினார்.

பொன்விழா மலரை வெளியிட்டு திரு. க. சிவராமன் பேசினார்.

யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராசா அறிமுகவுரை நிகழ்த்தினார்.

மலரின் முதல் பிரதியை யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கத்திடம் இருந்து நங்கூரம் ஆசிரியர் திரு. பொ. ஐங்கரநேசன் பெற்றுக் கொண்டார்

முன்னதாக முதறிஞர் க. சி குலரத்தினம், யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தனர்.

திருவாளர்கள் கா. குகபாலன், க. சிவராமலிங்கம், யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத்துறை இயக்குநர் திரு. சி. தியாகராசா, திருமதி யோகநாதன் ஆகியோரும் பேசினார்கள். (ச-111)

சைவசித்தாந்தம் காட்டும் இறைசக்தி அமைதி தரும்

சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஒக். 12

''நெருக்கடியான இன்றைய காலநிலையில் சைவசித்தாந்தம் காட்டும் இறைசக்தி எமக்கு அமைதி தரவல்லது.''

திருமறைக் கலாமன்றத்தின் சைவசித்தாந்த ஆய்வு வட்டம் வெளியிட்ட சைவசித்தாந்த சஞ்சிகை ஆக்கின இதழின் வெளியீட்டு விழாவில் மதிப்புரையை நிகழ்த்திய திரு. என். நந்தகுமாரன் இவ்வாறு கூறினார்.

இளைப்பாறிய அதிபர் திரு. எஸ். முத்தையா தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இம்மாதம் 3ஆம் திகதி நடைபெற்ற மேற்படி விழாவில் தொடர்ந்து பேசிய அவர்,

உலகில் உள்ள அனைத்து மக்களையும் நல்வழிப்படுத்தும் அறிவியல் ரீதியான கோட்பாடுகளைக் கொண்ட சைவசித்தாந்தத்தை எல்லா மக்களும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இந்த இதழில் காணப்படும் ஆக்கங்களின் தெளிவான அணுகுமுறைகள் சைவசித்தாந்தத்தின் சிறப்புக்களை உலக மக்களுக்குத் [illegible] என்று கூறினார்.

திரு. முத்தையா தமது தலைமை உரையில்,

இன்றைய சமூகம் சைவசித்தாந்தக் கருத்துக்களை தெளிவுறப் புரிந்து கொள்ள அது பற்றி ஆர்வத்துடன் கற்க வேண்டும். அதற்கு இது போன்ற வெளியீடுகள் பெருந்துணையளிக்கும் என்று கூறினார்.

திருமறைக் கலாமன்றத்தின் பொதுச் செயலாளர் திரு. ஜெ. யூ. கொன்ஸ்ரன்ரைன் பேசும் போது,

எண்ணூறு வருடங்களாக எமது மக்கள் மத்தியில் உள்ள சைவசித்தாந்தக் கோட்பாடுகள் உலகின் பெரும்பகுதியைச் சென்றடைய இச் சஞ்சிகை உதவும். இச் சஞ்சிகை விரைவில் தமிழிலும் வெளிவர உள்ளது. எமது சைவசித்தாந்தக் கருத்துக்கள் உலக மக்களின் சொத்து. அதன் தத்துவம் உலக மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதே எமது நோக்கம் என்று கூறினார்.

மங்கள விளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைத்த திரு முத்தையாவிடம் இருந்து நூலின் முதல் பிரதியை திரு. க. சத்தியானந்தசிவம் பெற்[illegible] திரு. க. ஞானசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினர். (ச-111)

வீதி திருத்தம்

சுதுமலை—தாவடி பிரதான வீதியோடு இணையும் சுமார் அரைமைல் நீளமான மாப்பியன் மில் வீதியை சுதுமலை மேற்கு [illegible] சனசமூக நிலையத்தினர் பொதுமக்கள் உதவியோடு புனரமைப்புச் செய்துள்ளனர். (ச-90)

குளம் புனரமைப்பு

நவாலி வடக்கு இடிகுண்டடிக்குச் சமீபமாகவுள்ள இராமக்குளம் ஆழமாக்கி புனரமைக்கப்பட்டுள்ளது (ச-90)

குளம் பெருக்கி
வளம் காண்போம்

தனிச் சிங்கள சுற்றுநிருபங்கள் வடபகுதிக்கு வருகின்றன

யாழ்ப்பாண அரச திணைக் களங்களுக்கு கொழும்பி லிருந்து தனிச்சிங்களத்தில் சுற்று நிருபங்கள் அனுப்பப் படுகின்றன.

சுகாதார திணைக்களம் அரசாங்க வைத்தியசாலை களில் கடமையாற்றும் தரம் மூன்றைச் சேர்ந்த மருந்துக் கலவையாளர்களுக்கு இவ்வாண்டு நடத்தப்படும் பரீட்சை பற்றிய சுற்று நிருபத்தையும் விண்ணப்பப் படிவத்தையும் தனிச்சிங்களத்தில் வெளியிட்டுள்ளது.

சிங்களம் தெரியாத வட பகுதி மருந்துக் கலவையாளர்கள் இதனால் பெரிதும் சிரமப்படுவதாக அறிய வருகிறது. (க-30)

மரண அறிவித்தல்கள்

திருமதி
செல்லம்மா தில்லையம்பலம்

காரைநகரைச் சேர்ந்த திருமதி செல்லம்மா தில்லையம்பலம் 6-10-93 இல் காரைநகரில் காலஞ்சென்று விட்டார்.

இவர் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், இரத்தினசபாபதி, நாகரத்தினம் (காரைநகர்), இராசரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி நாகேஸ்வரி, திருமதி புஸ்பராணி, திருமதி கோகிலவல்லி ஆகியோரின் மாமியாரும், சொர்ணரூபி, சொர்ணரஞ்சன், ராஜ்குமார், ராஜினி, ராஜேஸ்வரி, துஷ்யந்த் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் காரைநகரில் அன்றைய தினம் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி இரத்தினசபாபதி (அப்பச்சி
இராசன்

சேச் லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

(27627)

சின்னப்பா சண்முகலிங்கம்
(முன்னாள் எழுதுவினைஞர், யாழ். கச்சேரி)

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னப்பா பூரணத்தின் அன்பு மகன் சண்முகலிங்கம் 09-10-1993இல் கொழும்பில் காலமானார்.

இவர் யாழ் கச்சேரியில் எழுதுவினைஞராக கடமையாற்றினார். அன்னார் காலஞ்சென்ற நாகநாதி ராசம்மாவின் மருமகனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், தீபா (சுவிஸ்), தீலிபன் (சுவிஸ்), பிரதீபன், ஜெனிபா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு கனத்தை மயானத்தில் 10-10-1993 அன்று தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
மனைவி விஜயலட்சுமியும்,
பிள்ளைகளும்.

74/3, அரசடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(27622

குமரையா கனகரத்தினம்

குரும்பசிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது மானிப்பாயில் வசித்தவருமான குமரையா கனகரத்தினம் கொழும்பில் காலமானார்.

இவர் செல்வராணியின் அன்புக் கணவரும், சிவம் (ஜேர்மனி), நந்தினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், லட்சுமி, காலஞ்சென்ற தம்பிராசா (மூனாய்) ஆகியோரின் சகோதரரும், யோகராஜா, ராஜேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை வவுனியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
திருமதி க. செல்வராணி

"பூவாசா"
இணுவில் வீதி,
மானிப்பாய்.

(27625)

கனகசபை நித்தியானந்தன்
[சிமெந்துக் கூட்டுத்தாபனம்]

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு க. நித்தியானந்தன் 11-10-1993 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை சேதுநாயகி தம்பதிகளின் அன்பு மகனும், தவமணியின் அன்புக் கணவரும், சோபினியின் அன்புத் தந்தையும், பாலகுருசுவாமி, யோகசிகாமணி அம்மாள், பவானிதேவி, சேதாரநாயகி, செல்வக்குமாரன் (அதிபர், கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை), ஆனந்தக்குமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி விநாயகமூர்த்தி - சரசலோசனா, கந்தவனம் - தில்லைநாயகம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12-10-1993) சுன்னாகம் பெற்றோல் நிலை எதிர் ஒழுங்கையிலுள்ள பனிக்கிவளத்தை இல்லத்தில் பிற்பகல் 2.00 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கோத்திராவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பாலகுருசுவாமி

செல்வாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம்

(இ/2033)

முதலமைச்சருக்கு..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. திரு. தொடங்கொடவுக்கு ஆதரவு தெரிவிக்கும் 28 உறுப்பினர்களும் வந்தால் மட்டுமே தாம் பதவிப் பிரமாணம் செய்து வைக்க முடியும் என்றும்—

இன்று காலை வருமாறும்— ஆளுநர் தொடங்கொடவிடம் தெரிவித்தார்.

இதற்கிடையில் திரு திலகசேகரா ஐ.தே. கட்சிக்கு ஆதரவளிக்கக் கூடும் என்று நேற்றுப் பேசப்பட்டது.

ஆனால் வாகனக் கோளாறு காரணமாகவே தாம் உரிய நேரத்துக்கு (காலை 10-30 மணிக்கு) ஆளுநர் மாளிகை சென்றடைய முடியவில்லை என்று திலகசேகரா தெரிவித்தார்.

தமது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முடிவின் பிரகாரம் தான் தொடங்கொடவையே ஆதரிப்பதாகவும் அவர் கூறினார்.

தமது..
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போவதாக திரு விஜேதுங்கா கூறியிருந்தார்.

ஆனால் இப்போது அதனில் இருந்து விலகி, தமது சொந்தக் கொள்கைத் திட்டம் ஒன்றை மக்களுக்கு அறிவிக்க திரு. விஜேதுங்கா தீர்மானித்துள்ளார் என்றும்-

அதற்கு வாய்ப்பளிக்கு முகமாகவே புதிய நாடாளுமன்றக் கூட்டத் தொடரை அவர் ஆரம்பிக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (க-எ)

ஸ்ரீ ல சு..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிர்ப்பந்தம் ஏற்பட்டது" — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

தமது ராஜினாமா பற்றி கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்காவுக்கும் கட்சி பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவுக்கும் அனுரா அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இவர் சுதந்திரக் கட்சியில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

அனுராவின் இராஜினாமாவை கட்சி ஏற்றுக்கொள்ளுமானால் அவர் தமது எம். பி. பதவியையும் இழந்து விடுவார்.

'கட்சியிலிருந்து என்னை இடைநிறுத்தி வைத்து 89 நாட்கள் கடந்து விட்டன. ஆனால் எதற்காக இடைநிறுத்தி வைக்கப்பட்டேன் என்பது குறித்து அறிவிக்கப்படவில்லை. குற்றச்சாட்டுப் பத்திரம் இன்னமும் அனுப்பப்படவில்லை' —என்றும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஆ-எ-ஊ)

உயர்தர
மாணவர்கட்கு ..
பிரத்தியேக வகுப்புகள்
வர்த்தகமும் நிதியும்
A/L 94
மீட்டல் வினா, விடை
வகுப்புகள்
ஆசிரியர்:
இராஜகிருஷ்ணர் .
இரகுநாதன்
செவ்வாய் / வியாழன்
3 - 4 — வினா, விடை
4 - 5 — பாடத்திட்டம்
★ மாதிரி வினாத்தாள் பரீட்சைகள் நடத்தப்படும்.
★ மாணவர்களிடம் அனுமதிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
ஆரம்பம்:
12 — 10 — 1993
செவ்வாய்
BOND INSTITUTES
33A, Stanley Road,
Jaffna.
(இ/6195)

ஐ.நா. அமைதிப் பணிக்கு இலங்கை படை அனுப்பாது

கொழும்பு, அக். 12

தமது அமைதி காக்கும் படைகளில் பணியாற்றுவதற்காக படையினரை தந்துதவும்படி ஐ.நா. விடுத்த வேண்டுகோளை இலங்கை அரசு நிராகரித்து விடக்கூடும்.

— இவ்வாறு கொழும்பில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"நாட்டில் யுத்தம் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ஐ.நா. அமைதி காக்கும் படைக்கு நாம் எமது படையினரை அனுப்பி வைக்கமுடியாது."

— என்றும் அவர் தெரிவித்தார். (க-எ)

9 இராணுவ அதிகாரிகள் மீது விரைவில் வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஒக். 12

எம்பிலிப்பிட்டியாவில் 31 பாடசாலை மாணவர்கள் கடத்தப்பட்டு பின் காணாமற் போனதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக ஒன்பது இராணுவ அதிகாரிகள் மீதும் மற்றும் கல்லூரி அதிபர் ஒருவர் மீதும் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

சட்டமா அதிபர் திலக் மாரப்பான இவ்வாறு தெரிவித்ததாக "சண்டே ஒப்சேர்வர்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

இச்சம்பவம் தொடர்பாக கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வரும் வழக்குகளின் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர், குற்றப்பத்திரிகைகள் தாக்கலாகும் என்றும் அவர் கூறினார். (க-எ)

கிருமிநாசனி விநியோகம் விற்பனைக்கு புதிய விதிகள்

யாழ். செயலகம் அறிவிப்பு

விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் களை கொல்லிகள் மற்றும் கிருமிநாசனிகளின் விலைகள், விற்பனை, விநியோகம் என்பன சம்பந்தமாக யாழ். செயலகத்தின் உணவு உற்பத்திக் குழு புதிய நடைமுறைகளை அறிவித்துள்ளது.

அதன் பிரகாரம் கிருமிநாசனிகள் களைகொல்லிகளின் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட விலைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. கம இரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களால் குறிக்கப்பட்ட சில்லறை விலைக்கே அவை விற்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய முக்கிய புதிய நடைமுறைகள் வருமாறு:-

★ கம இரசாயன முகவர்களால் கொள்வனவு செய்யப்படவுள்ள கம இரசாயனங்களின் பட்டியல் இனிமேல் முதலில் உதவி விவசாயப் பணிப்பாளரால் (விஸ்தாரக்கம்) அங்கீகரிக்கப்படவேண்டும்.

★ பைரதுரோயிட் வகுப்பைச் சேர்ந்த சகல கம இரசாயனங்களான டெசிஸ், பேதுறொயிட், அம்புஷ், சுமிசிடின், சைபர் சுமிசிடின் ஆகியன பாவனைக்கு தடை செய்யப்பட்டுள்ளன.

★ கையிருப்பிலுள்ள பைரதுரொயிட் வகுப்பைச் சார்ந்த சகல கம இரசாயனங்களையும், 15 10 93க்கு முன்னர் பிரதேச உதவி ஆணையாளரிடம் (யாழ். கமநல சேவைகள் திணைக்களம்) கையளித்தல் வேண்டும். இவை வெங்காயத்தாள் கோதி அழுக்கட்டுப்பாட்டுக்கு மாத்திரம் அவ்வப்பகுதி விவசாயப் போதனாசிரியரின் சிபாரிசின்படி விநியோகிக்கப்படும்.

★ பின்வரும் கம இரசாயனங்களை அவ்வப்பகுதி விவசாயப் போதனாசிரியரின் சிபாரிசுக்கமைய கட்டுப்படுத்தப்பட்டு விநியோகிக்க வேண்டும்: மெத்தமிடாபொஸ், மெத்தறின், தமறோன், ஹொக்குறொஸ், மொனிற்றர், றெக்கிரார் அலோறோன், மொறித்தலோன், பவரோன், மொனோகுரோட்டோபொஸ், றொக்கிரார் குரோட்டோபொஸ், ஹார்குறோன் நுவக்குறோன், மொனோக்குறோன், டைத்திலோன், பொலிதல், மெட்டாசிஸ்டொக்ஸ், லானேட், வெல்மெற், உறிமோசான், மீதோமில் எம், சற்.

காலங்கடந்த கம இரசாயனங்களை விற்பனை செய்வது உடனடியாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. கையிருப்பிலுள்ள மேற்கூறப்பட்ட கம இரசாயனங்களை 15. 10. 93க்கு முன்னர் உதவி விவசாயப் பணிப்பாளர் (விஸ்தாரக்கம்) திருநெல்வேலி அலுவலகத்தில் முன்பாக கையளித்தல் வேண்டும்.

உற்பத்தியாளரின் ஒட்டுச் சீட்டையில் (லேபல்) எவ்வித மாற்றமும் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது (விலை, பயன்படுகாலம் முடிவுறும் திகதி ஆகியன). (க)

தையல் பயிற்சி நிலையம் திறப்பு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை ஊர்காவற்றுறைப் பிரிவு உப அலுவலகத்தின் தையல் பயிற்சி நிலையத் திறப்புவிழா சுழிபுரம் வழக்கம்பரையில் அண்மையில் நடைபெற்றது. பிரிவுத் தலைவர் திரு. மு. வேலுப்பிள்ளை நிலையத்தைத் திறந்து வைத்தார்.

(க-28)

மருந்து பொருள் வழங்கல்

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினர் ரூபா 2,000 பெறுமதியான மருந்துப் பொருள்களை கர்ப்பிணித் தாய்மாருக்கும், உடல் நலிவானவர்களுக்கும் வழங்கினார்கள். (க-72)

மரக் கிளை ..
(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவையற்ற விபத்துக்களும் ஏற்படுகின்றன. நகரத்தில் எமது சுத்திகரிப்பு பணிகளும் பாதிக்கப்படுகின்றன. எரிபொருள், வாகன பற்றாக்குறை இருந்தும் மாநகர சபை நகர்ப்புற சுத்திகரிப்பை இயன்றளவு செய்து வருகிறது.

'கொலரா பரவும் காலத்தில் நீர் விநியோகம், அத்தியாவசிய சுத்திகரிப்பு பணிகளுக்கு வாகனத் தேவை என்பன மிக முக்கியமாகிறது. எனவே வீடுவளவுகளில் வெட்டப்படும் மரக்கிளைகள் செடிகள் என்பனவற்றை வீதியோரத்தின் பொது இடங்களில் போட வேண்டாம்.

இதனை கவனம் எடுக்காமல் வீதிகளையும் பொது இடங்களையும் அசுத்தம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் — அந்த பத்திரிகை குறிப்பில் இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 361/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12-10-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.